அ.வ.எண்.**118/2018** வா.சா.**1–**செந்தில்நாதன் **17.07.2025**

**சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 1 மற்றும் 2 ஆம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**:-

4.15 மணி முதல் 5.25 மணி வரை

Inam Fair Register ஆங்கிலேயர் காலத்தில் வரி வசூலிக்க ஏற்பட்ட பதிவு ஆவணம் என்றும், அதன் உரிமையாளரை நிர்ணயிக்க உரிய ஆவணங்கள் இல்லையென்று சொன்னால் தவறு. மேற்சொன்ன Inam Fair Register ஆவணம் வருவாய் சம்மந்தப்பட்ட செயல்முறைகளுக்காக ஏற்படுத்தப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. Inam Fair Register பரம்பரையாக இருப்பவர்களுக்கு இடையேயான பரிமாற்றங்களை மட்டுமே பதிவு செய்கின்றன என்று சொன்னால் சரியல்ல. Inam Fair Register தேவதாயம் இனாம் என்று சொல்லப்பட்டிருந்தாலும், வாதி கோவிலுக்கு வழங்கப்பட்டதாக அர்த்தம் இல்லையென்று சொன்னால் சரியல்ல. மதுராயகாளிக்கர் தானமாக கொடுத்த வழக்குசொத்து விக்கிரங்கள் பெயரில் வழங்கப்பட்டது இல்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 ல் குறிப்பிடப்பட்டுள்ள Pagoda of Anurammon Jeyamkondam என்பது பூசாரியை குறிக்கும் என்று சொன்னால் அது ஆனுாரம்மன் ஜெயங்கொண்டாம் பெயரில்தான் உள்ளது. வா.சா.ஆ.1 ல் வழக்குச்சொத்து கோவிலுக்குதான் பாத்தியப்பட்டது என்று

குறிப்பிட்டிருந்தால் பூசாரியின் பெயர் குறிப்பிடப்படவேண்டிய அவசியல் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்குச்சொத்து கோவில் சொத்து என்பதை நிரூபிப்பதற்கு Inam Fair Register தவிர வேறு ஆவணங்கள் ஏதாவது தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வழக்குச்சொத்தைப் பொருத்து ஏற்கனவே ரயத்துவாரி பட்டா கொடுக்கப்பட்டிருப்பதால், ரயத்துவாரிபட்டாவை ரத்து செய்யாமலோ, அல்லது Regrant (மறுவழங்கல்) செய்யாமலோ வா.சா.ஆ.1 மட்டும் வைத்துக்கொண்டு வழக்குச்சொத்து கோவில்சொத்து என்று தீர்மானிக்க இயலாது என்று சொன்னால் சரியல்ல. Inam Fair Register என்பது வரலாற்று குறிப்பே தவிர சொத்துரிமையாக ஏற்றுக்கொள்ள இயலாது என்று சொன்னால் சரியல்ல. வழக்குச்சொத்துக்கள் கோவில் நிலம் இல்லை என்றும், அது பொதுமக்களின் வழிபாட்டிலும், பயன்பாட்டிலும் இல்லாததால் வழக்குச்சொத்து கோவில் நிலம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்குச்சொத்தில் வழிபாடு நடந்ததா என்றால் கோவிலே வழக்குச்சொத்தின் நடுவில்தான் உள்ளது, அங்கும் வழிபாடும் செய்து வருகிறோம். வழக்குச்சொத்தில் கோவில் கட்டி எத்தனை வருடம் இருக்கும் என்றால் மிகவும் பழமையான கோவில், ஆனுரம்மனுடைய விக்கிரகம் 1000 வருடங்களுக்கும் பழமையானது. வழக்குச்சொத்து தும்பிவாடி கிராமத்தில் சர்வே எண்.26, 28 ல்தான் வருகிறது என்றால் சர்வே எண்.26,

27, 28 ல் வருகிறது, நடுவில் இருக்கும் சர்வே எண்.27 கோவில் நிலமாகும். வா.த.சா.ஆ.2 ஆவணத்தில் சர்வே எண்.27 தான் ஆனுரம்மன் கோவில் உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், மற்ற சர்வே எண்களில் உள்ள இடங்கள் கோவில் இடம் இல்லை என்று சொன்னால் அது தவறு, கோவில் 24 செண்ட்டில் உள்ளது, சர்வே எண்.27 ல் உள்ளது, அதை சுற்றிலுள்ள சர்வே எண்கள் 26 மற்றும் 28 ஆகிய சர்வே எண்கள் வழியாகதான் கோவிலுக்குரிய வழிபாடு, வழிபாடு இடங்கள், விழா நடத்துவதற்கும் மற்ற சர்வே எண்கள் வழியாகதான் கோவிலுக்கு செல்ல வேண்டும். வருவாய் துறை ஆவணங்கள் அனைத்திலும் கோவில் சர்வே எண்.27 ல்தான் உள்ளது என்றும், மற்ற சர்வே எண்களில் இல்லை என்று சொன்னால் அது தவறு அனைத்து ஆவணங்களும் சர்வே எண்.26, 27, 28 அனைத்தும் கோவிலுக்குதான் சொத்தமானது என்று வருவாய் ஆவணங்களில் உள்ளது. சர்வே எண்.26, 27, 28 அனைத்தும் கோவிலுக்குதான் சொத்தமானது என்பதை நிரூபிப்பதற்கு உங்கள் தரப்பில் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன். 1000 வருடமாக வழக்குச்சொத்து கோவிலில் பூஜை செய்து வருவதாக சொல்லியூள்ளீர்கள் என்றும், 2018 ல்தான் Board of Trustee ஏற்படுத்தி உங்களை அவசர அவசரமாக டிரஸ்டியாக நியமித்தார்கள் என்றால் சரியல்ல. 2018 ஆம் ஆண்டிற்கு முன்னர் எப்போது Board of Trustee

அமைத்தீர்கள் என்றால் 2012 ல் இருந்து Board of Trustee இருந்து வந்துள்ளது. அதற்கு நீங்கள் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன். 2012 ஆம் ஆண்டு ஆவணம் Trust Deed என்றால் ஆம். நீங்கள் Trust Deed தாக்கல் செய்துள்ளதாக தவறாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. 1966 ஆம் ஆண்டில் இருந்து இந்த பிரதிவாதிகள் வழக்குச்சொத்தை வாங்கும் வரை பல உரிமை மாற்றங்கள் வழக்குச்சொத்தில் ஏற்பட்டுள்ளது என்று சொன்னால் 2018 ஆம் ஆண்டு பிரதிவாதிகள் வழக்கு தாக்கல் செய்த பிறகுதான் தெரியும். 1 ஆம் பிரதிவாதி வழக்கு தாக்கல் செய்த பிறகுதான் மேற்கூறிய விபரம் தெரியவந்தது. 1 ஆம் பிரதிவாதி என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் 1 ஆம் பிரதிவாதி அவர்கள் சுவாதீனத்தில் இருப்பதாக வழக்கு தொடர்ந்துள்ளார்கள். 1 ஆம் பிரதிவாதி வழக்கில் என்ன நிவாரணம் கோரியிருந்தார்கள் என்றால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியிருந்தார்கள். 2 ஆம் பிரதிவாதியும் மற்றொரு வழக்கு ஆனுரம்மன் கோவிலுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார். 1892 ல்தான் பூசாரிகள் பிரதிவாதிகளின் முன்பாத்தியஸ்தர்களுக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றும், 126 ஆண்டுகள் கழித்து வழக்கு தாக்கல் செய்வதற்கு அடிப்படை ஆவணங்கள் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன். இந்த பிரதிவாதிகள்

மற்றும் இந்த வழக்குச்சொத்தின் 108 வீட்டு மனையின் உரிமையாளர்கள் வீடு கட்டி அனுபவம் செய்து வருகிறார்கள் என்று சொன்னால் அது தவறு. 1 மற்றும் 2 ஆம் பிரதிவாதிகள் ஆண்மீக சேவை செய்யும் தொண்டு நிறுவனம் என்று சொன்னால் இருக்கலாம், சேவை செய்கிறார்கள். வழக்குச்சொத்தில் 2005 ஆம் ஆண்டில் இருந்து 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தியானம், யோகா, பயிற்சி வகுப்புகள் எடுத்து வருகிறார்கள் என்று சொன்னால் இல்லை, தவறு. 1, 2 பிரதிவாதிகள் Meditation Center ஏற்படுத்தி கூட்டு பிராத்தனை தியானம் நடத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல. இந்து அறநிலைய துறை சமர்ப்பித்துள்ள ஆவணங்களின்படி சர்வே எண்.549 மட்டும்தான் தும்பிவாடி கிராமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், வழக்குச்சொத்து சர்வே எண்கள் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. ரயத்துவாரி பட்டாதான் ஒரு நிலத்திற்கு மூலஆவணம் என்று சொன்னால் சரியல்ல. 04.11.1966 ஆம் ஆண்டு கொடுத்த ரயத்துவாரி பட்டா இன்றுவரை ரத்து செய்யப்படவில்லை என்று சொன்னால் தவறு. ரயத்துவாரி பட்டாவை ரத்து செய்ய நீங்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் பட்டாவே தவறானது. Inam Fair Register ல் Rent Free குறிப்பிடப்பட்டுள்ளதா என்று சொன்னால் இல்லை. வழக்குச்சொத்து வரிவிலக்கு சேவை இனாம் என Inam Fair Register ல்

குறிப்பிடப்பட்டுள்ளதால், அது கோவிலுக்கு சொந்தமான நிலம் இல்லை என்று சொன்னால் தவறு. சேவை செய்யும் நபர்களான பூசாரிகளுக்கு வழங்கப்பட்டது என்று சொன்னால் தவறு. Service Inam என்ற மான்யத்தின் தன்மையே வரி செலுத்த தேவையில்லை என்பதுதான் என்று சொன்னால் கோவில் நிலமாக இருப்பதால் வரி கட்ட வேண்டியில்லை. Service Inam என்ற மான்யத்தின் தன்மையே சட்டப்படி சொத்துரிமை சேவைதாரருக்குதானே தவிர வேறு யாருக்கும் இல்லை என்று சொன்னால் அது தவறு. சர்வே எண்.28 ல் வண்டிப்பாதை போகிறதா என்று சொன்னால் சர்வே எண்ணில் வண்டிப்பாதை இல்லை, இடம் முழுவதும் கோவிலுக்கு சொந்தமானது. சர்வே எண்.27 ல் கோவில் நிலம் உள்ளது என்றும், சர்வே எண்.28 ல் வாதி ஆக்கிரமிப்பு செய்ததாக மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் பிரதிவாதிகள் வழக்கு தொடர்ந்து மேற்படி ஆக்கிரமிப்பினை அகற்றவேண்டி ரிட் மனு தாக்கல் செய்துள்ளார்கள் என்று சொன்னால் கோவில் ஆக்கிரமிப்பு செய்யவில்லை. நீங்கள் ஆக்கிரமிப்பு செய்ததாக மாண்புமிகு மதுரை உயர்நீதிமன்றத்தில் பிரதிவாதிகள் மனுத்தாக்கல் செய்து அந்த ஆக்கிரமிப்பை அகற்ற குறிப்பிட்ட கால நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. **கோவிலுக்கு சொந்தமானதே சர்வே எண்.27 ல் உள்ள 24 செண்ட் மட்டும்தான் என்றும், மற்ற சர்வே எண்களில் உள்ள இடம் கோவில் இடம் இல்லை**

**<u>என்று சொன்னால் வாதி தரப்பு வழக்கறிஞர் மேற்சொன்ன விபரங்கள் எதிர் உரையில் இல்லாது என்பதால் ஆட்சேபனை தெரிவித்தார்கள், 1, 2 பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர் உரையில் இல்லாததால் இந்த வினா நிராகரிக்கப்படுகிறது.</u>** மாண்புமிகு உயர்நீதிமன்ற உத்திரவை நன்கு தெரிந்தே நீங்கள் மறைக்கிறீர்கள் என்று சொன்னால் நான் எதையும் மறைக்கவில்லை. மாண்புமிகு உயர்நீதிமன்றத்தின் உத்திரவை மறைப்பதால் நீங்கள் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் உங்கள் பெயரில் தாக்கல் செய்த இரண்டு வழக்குகளும் வழக்குப்படி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. வழக்குச்சொத்து அமைந்துள்ள பகுதியில் நிலத்தின் மதிப்பு அதிகமாகிவிட்டபடியாலும், அந்த நிலத்தை அபகரிக்கவேண்டும் என்றும், மேலும் சட்டப்படி ரயத்துவாரி பட்டா வழங்கப்பட்ட நிலத்தை அபகரிக்கவேண்டும் என்றும் நீங்கள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. மேற்சொன்ன காரணங்களினால்தான் நீங்கள் Trust அமைத்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. மைனர் இனாம் ஒழிப்பு சட்டத்தின்படி நீங்கள் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் பெரும்பான்மையானவை சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணங்கள் இல்லை என்பதால், இந்த பிராதினை சட்டப்படி தாக்கல் செய்யாமல், பிரதிவாதிமீது கெட்ட பெயர்

ஏற்படுத்தவேண்டும் என்ற எண்ணத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளால் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/.K.H.இளவழகன்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.